**<u>செய்தி வெளியீடு எண்.684</u>** **<u>நாள்.19.8.2008</u>**

## <u>மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட சீராய்வுக் கூட்டம் நாள் 19.8.2008</u>

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களால் இந்து சமய மற்றும் அறநிலையத்துறை தொடர்பான சட்டப்பேரவை அறிவிப்புகள் மற்றும் நலத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றம் குறித்து அறநிலையத்துறை அலுவலர்கள் கலந்து கொண்ட சீராய்வுக் கூட்டம் 19.8.2008 அன்று தலைமைச் செயலகத்தில் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்ற அறிவிப்புகள், நலத்திட்டங்கள், திருப்பணிகள், கட்டுமானப் பணிகள் மற்றும் பக்தர்கள் நலனுக்கான அடிப்படை வசதி செய்து தருதல் ஆகியவை குறித்து சீராய்வு செய்து இப்பணிகளை உரிய காலத்தில் சிறப்பான முறையில் முடிக்க வேண்டும் என அறிவுரைகள் வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப. அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலாளர்/ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசு துணைச் செயலர், அறநிலையத்துறை கூடுதல் ஆணையர், இணை ஆணையர்கள், அரசு சார்பு செயலர்கள், செயற்பொறியாளர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.